மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 94/2020
வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: காசிவிஸ்வநாதன் தேதி : 28.01.26
வயது : த/பெ : முருகன் என்ற முருகேசன்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>28.01.26 குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சொத்து மற்றும் அதற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்தில் வண்ணார் சமூகத்தினர் குடியிருந்து வந்தனர் என்றால் சரிதான். வண்ணார் சமூகத்தினர் குடியிருந்ததன் அடிப்படையில் அவர்களுக்கு அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் அவர்களுக்கு பத்திரம் கிடையாது பட்டா மட்டும் தான் என்றால் சரிதான். வழக்கு சொத்து எப்படி எங்களுக்கு பாத்தியம் என்றால் என் பெரியப்பாவிடமிருந்து வாங்கியதன் அடிப்படையில் பாத்தியம். யார் வாங்கினார் என்றால் என் அப்பா வாங்கினார். என் அப்பா எப்போது எழுதி வாங்கினார் என்றால் 1997 ல் எழுதி வாங்கினார். யாரிடம் எழுதி வாங்கினார் என்றால் பாப்பாத்தியம்மாள் மற்றும் நெல்லையப்பன் ஆகியோரிடமிருந்து எழுதி வாங்கினார்.

பாப்பாத்தியம்மாள், நெல்லையப்பன் ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கும் போது அவர்கள் பெயரில் உரிமை மூல ஆவணம் அல்லது வருவாய்த்துறை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.28 19:27:38 +0530

ஆவணம் இருந்ததா? என்றால் தெரியாது. என் பெரியப்பா நல்லகண்ணு பெயரில் உரிமை மூல ஆவணம் அல்லது வருவாய்த்துறை ஆவணம் உண்டா என்றால் தெரியாது. 1997 ம் ஆண்டு கிரைய ஆவணத்தில் மேற்கு பக்க எல்கை யார் இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தங்கவேல் மகன் பட்டாணி இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என் இடத்திற்கு மேல் பக்கம் தங்கவேல் மகன் பட்டாணி மற்றும் துரை ராஜ் பெயரில் பட்டா உள்ளதா என்றால் தெரியாது.

பட்டாணி, துரைராஜ் பெயரில் உள்ள பட்டாவில் கண்ட சர்வே எண்.344/20 என்றால் தெரியாது. சர்வே எண் 344/20 ஐ துரைராஜ் மற்றும் பட்டாணியிடமிருந்து சண்முகம் மகன் பட்டாணி 23.01.2014 ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. இவ்வழக்கில் தங்கவேல் மகன் துரைராஜ் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். ஏன் அவரை சேர்க்கவில்லை என்றால் வழக்கறிஞரிடம் சொல்லியிருந்தேன். ஏன் சேர்க்கவில்லை என்று தெரியாது. இவ்வழக்கில் உரிமை பிரச்சனை இருப்பதால் மேற்படி தங்கவேல் மகன் துரைராஜை சேர்க்காததால் தாவா வழக்கு தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண்.344/18 பி ஆகும். அதற்கு பட்டா என் தந்தை பெயரில் உள்ளது. அந்த பட்டாவை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் விவரம் தெரியாது. சர்வே எண்.344/18 பி–க்கு மேற்கில் தான் சர்வே எண்.344/20 உள்ளது என்றால் சரிதான். நான் எத்தனை சென்டிற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால் அரை சென்டிற்கு வழக்கு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.28 19:27:42 +0530

போட்டுள்ளேன். வா.சா.ஆ.1ன்படி நான் அரை செண்டிற்கு உரிமை கோருகிறேனா? என்றால் ஆம். வா.சா.ஆ.1ல் பழைய சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எங்கள் பகுதியில் 1992–1993ல் நத்தம் நிலவரித் திட்ட காலத்தில் புது சர்வே எண்கள் கொடுக்கப்பட்டன என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1, 1997ல் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் புதிய புல எண்ணை காண்பித்து மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.344/20 சம்பந்தமாக என் குடும்பத்தினர் மற்றும் என் பெயரில் பட்டா கிடையாது என்றால் சரிதான். நான் எந்த வருடம் ஊருக்கு வந்தேன் என்றால் 1996ல் வந்தேன். தங்கவேல் மகன் பட்டாணி மற்றும் துரைராஜ் நீண்ட காலமாக உள்ளூரில் கிடையாது என்றால் சரியல்ல.

புல எண்.344/20க்கு மேல் பக்கம் யார் இடம் என்றால் சுடலை முத்து இடம் உள்ளது. அந்த இடத்தை 3ம் பிரதிவாதி நாகமணி கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். சர்வே எண்.344/20க்கு தெற்கு பக்கம் நாகமணிக்கு பாத்தியப்பட்ட வீடு, இடம் உள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி துரைராஜ் மற்றும் பட்டாணியிடமிருந்து 2014ல் கிரையம் வாங்கிய இடத்தை 15.10.2020ல் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்க்கவில்லை. எதிர்வழக்குரையில் புல எண்.344/20 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று எதிர்கோரிக்கை செய்துள்ளார் என்றால் தெரியும்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.01.28 19:27:46 +0530

3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் கிரையம் பெறும் முன் புல எண்.344/20ஐ அளந்து கேட்டார் என்றால் அளக்கும் போது தான் தெரியும். 01.09.2008ல் ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் புல எண்.344/20ஐ அளவீடு செய்தார் என்றால் தெரியும். அவ்வாறு அளக்கும் போது தான் புல எண்.344/20ல் நாங்கள் கிழமேல் 9 அடி தென்வடல் 17 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ள விவரம் 2, 3 பிரதிவாதிகளுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக 2, 3ம் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பை அகற்றி தர கோரினார்கள் என்றால் சரியல்ல.

அப்போது நான் 3ம் பிரதிவாதியிடம் நீங்கள் கிரையம் வாங்குங்கள் நான் ஆக்கிரமிப்பை அகற்றி தருகிறேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. என் வார்த்தையை நம்பி தான் 3ம் பிரதிவாதி புல எண்.344/20ல் 15.10.2020ம் தேதி கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. புல எண்.344/20ல் எனக்கு உரிமையும், அனுபவமும் உள்ளதா என்றால் ஆம். புல எண்.344/20ல் உரிமையை காட்டக் கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புல எண்.344/20க்கு 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கும் முன் 2ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் இருந்திருக்கும் நான் பார்க்கவில்லை.

2ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு புல எண்.344/20க்கு 3ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் கிரையம் வாங்கிய பின்பு தெரியும். 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு 25.10.2020ல் கிழமேல் 9 அடி, தென்வடல் 17 ஆக்கிரமிப்பினை அகற்றித் தரக் கோரினார்

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISH
Date: 2026.01.28 19:27:50 +0530

என்றால் சரியல்ல. நான் அகற்றி தருவதாக கூறி வீண் காலதாமதம் செய்துவிட்டு பொய்யான சங்கதிகளின் பேரில் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் தடங்கல் மனு கொடுத்தேனா என்றால் ஆம். 2020 ம் வருடம் 10 ம் மாதம் தடங்கல் மனு கொடுத்தேன் தேதி ஞாபகம் இல்லை.

நான் தடங்கல் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றும் வழக்கறிஞர் அறிவிப்பு தான் அனுப்பினேன் என்றால் வழக்கறிஞருடன் போய் தான் மனு கொடுத்தேன். அதன் நகலை தாக்கல் செய்யலாமா என்றால் வழக்கறிஞரிடம் இருக்கும். வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வழக்கறிஞரிடம் விவரம் சொன்னேன் மற்றபடி எனக்கு அது பற்றிய விவரம் தெரியவில்லை. 3 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய விவரம் தெரிந்து கொண்டு ஆவணங்களை உருவாக்க வேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

எங்கள் நிலத்திற்கும் சேர்த்து நத்தம் நிலவரித் திட்டத்தில் தங்கவேல் மகன்கள் துரைராஜ், பட்டாணிக்கு பட்டா வழங்கப்பட்டதாக வழக்கிற்காக பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் இடம் பட்டாணி, துரைராஜ் இடத்தில் சேர்ந்து உள்ளது என்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் 3 ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாக சொன்ன பிறகு தான் அது பற்றி தெரியும்.2020 க்கு பிறகாவது வருவாய்த்துறையில் எந்த நடவடிக்கையாவது எடுத்தேனா என்றால் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் இடத்திற்கு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.28 19:27:56 +0530

மேற்கில் இடம் உள்ளதாக சொல்லும் தங்கவேலுக்கு எவ்வளவு இடம் பாத்தியம் என்றால் அரை செண்ட் ஆகும். அரை செண்ட் என்பதற்கு ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்க்கவில்லை. எங்கள் எல்லாருக்கும் அரை செண்ட் தான் கொடுத்தார்கள்.

வா.சா.ஆ.1ன் வாயிலாக என் தந்தை உரிமை இல்லாத நபரிடம் கிரையம் வாங்கியதால் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனடிப்படையில் தாக்கல் செய்துள்ள தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. புல எண்.344/20 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. புல எண்.344/20ல் எனக்கு, என் குடும்பத்தாருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் தந்தைக்கு பாத்தியப்பட்ட இடம் புல எண்.344/18 என்றால் அது எங்கள் இடத்துடன் சேர்ந்த இடமாகும். புல எண்.344/18ல் பாளையங்கோட்டை-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலைக்கு கொஞ்ச இடம் எடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நெடுஞ்சாலைக்கு எடுத்த இடத்தின் புல எண்.344/18 ஏ என்றால் சரிதான். மீதமுள்ள புல எண்.344/18 பி-க்கு என் அப்பா பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் தெரியாது.

புல எண்.344/18பி-ன் பட்டாவினை தாக்கல் செய்தால் விஸ்தீரணம் தெரியவரும் என்றால் சரிதான். பட்டாவை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 3ம் பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தர்கள் ஊரில் இல்லாததால் நாங்கள் புல எண்.344/20ஐ ஆக்கிரமித்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் ஆக்கிரமித்து

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.28 19:28:00 +0530

வைத்துள்ள எதிர்வழக்குரை 2ம் தபசில் சொத்தினை 3ம் பிரதிவாதியிடம் சுவாதீனம் ஒப்படைக்க கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரரும் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ள கிரைய ஆவணம் உரிமை மூலத்தின் பேரில் என்பதால் நான் கேட்டுள்ள செல்லாது மற்றும் இல்லா நிலையது என்ற பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ள ஆவணம் உரிமை மூலத்தின் பேரில் என்பதால் அதனை பொறுத்து நான் கேட்டுள்ள விளம்புகைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என் தந்தை உரிமை இல்லாத நபரிடமிருந்து கிரையம் வாங்கியதால் நான் கேட்டுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கேட்டுள்ள எதிர்கோரிக்கை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.28 19:28:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.